**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097169

1. District : கடலூர் மாவட்டம் | PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு | Year ஆண்டு: 2019 | FIR No. மு.த.அ. எண்: 1/2019 | Date நாள்: 24.01.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: As Amended by The Prevention of Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல்: 22.01.2019 12.30 hrs
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.01.2019
Time நேரம் : 0830 hrs
(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I
Time நேரம் : 0830 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ. தெற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address முகவரி : பரங்கிப்பேட்டை
(c) In case outside limit of this Police Station, then the Name of P S -- District --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாள்/ தகவல் தந்தவர் பெயர் T. கணேசன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தங்கராசு,
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் வியாபாரம்
(g) Address : முகவரி நெ.16, நந்தவனத் தெரு, குறிஞ்சிப்பாடி கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

இளங்கோவன், VAO, பரங்கிப்பேட்டை,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

Scanned by CamScanner

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 24.01.2019 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, நிலையம் ஆஜர் செய்த குறிஞ்சிப்பாடி நெ.16, நந்தவனத் தெருவில் வசிக்கும், தங்கராசு மகன் கணேசன் என்பவர், கணினி தட்டச்சு புகார் மனுவினை நடவடிக்கை எடுக்க கொடுத்துக்கொண்டார். புகார் மனுவின் விவரம் பின்வருமாறு அனுப்புனர், T.கணேசன், த/பெ. தங்கராசு, (லேட்), நெ.16, நந்தவனத் தெரு, குறிஞ்சிப்பாடி, கடலூர் மாவட்டம், செல் : 9842017253, பெறுநர், உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கடலூர். அய்யா, நான் குறிஞ்சிப்பாடி கடைத் தெருவில் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். மேலும், நான் குடும்பத்துடன்,

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

அ. [signature] 24/1/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature]

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24-1-19 at 09.30 hrs.

Name பெயர் S. THIRUVANGADAM.
Rank நிலை .................... No. எண் ..........

Inspector of Police,
V & AC - Cuddalore.



Scanned by CamScanner

நெ.16 நந்தவனத் தெருவில் வசித்து வருகிறேன். நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். எனது மூத்த மகள் விநோதினியை நடுவீரப்பட்டில் வசிக்கும் ஜெயராமன் மகன் குகன் நமச்சிவாயம் என்பவருக்கு திருமணம் செய்துவைத்தேன். எனது சம்மந்தி ஜெயராமன் என்பவருக்கு சொந்தமாக பரங்கிப்பேட்டை குட்டையப செட்டித் தெருவில் சுமார் 3520 சதுரடி கொண்ட காலி மனை உள்ளது. அந்த காலி இடத்திற்கு பட்டா வழங்க வேண்டி சுமார் 6 மாதத்திற்கு முன்னால் புவனகிரி வட்டாட்சியரிடம் ஜெயராமன் மனு கொடுத்திருந்தார். ஆனால் இதுநாள் வரை ஜெயராமன் பெயருக்கு பட்டா வழங்கவில்லை. எனது சம்மந்தி ஜெயராமன் என்னிடம் இது சம்மந்தமான விளக்கத்தை சொல்லி "தனக்கு வயதாகி உடல் நலம் சரியில்லை. என்னால் அலைந்து திரிந்து பட்டாவை வாங்க முடியவில்லை. என் சார்பாக நீங்களே மெனக்கட்டு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்க" என்று என்னிடம் கேட்டுக்கொண்டார். அதனால் நான், எனது சம்மந்தியின் பட்டா மாற்றம் சம்மந்தமாக நான், 22.01.2019ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு பரங்கிப்பேட்டை VAO இளங்கோவன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து எனது சம்மந்தி ஜெயராமனின் பட்டா மாற்றம் சம்மந்தமாக விசாரித்தேன். அவர் சிறிது நேரம் ஆவணங்களை பார்த்துவிட்டு, "ஜெயராமன் பெயருக்கு பட்டா கிடைக்க ரூ.20,000/– என்னிடம் கொடுத்தால் நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று சொன்னார். அதற்கு அவரிடம் நான் எனது சம்மந்தி ஜெயராமன் பட்டா வேண்டி மனு கொடுக்கும்போது அதற்குண்டான தொகையை செலுத்திவிட்டார் என சென்னேன். அதற்கு VAO இளங்கோவன் என்னிடம் "அந்த பணம் அரசாங்கத்திற்கு போயிருக்கும், நான் கேட்கும் ரூ.20,000/– பணம் எனக்கு தனியா கொடுக்கனும், அப்போது தான் நான் ஜெயராமன் பெயருக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வேன்" என்று சொன்னார். பின்னர், VAO இளங்கோவன்விடம், நான் போய் என் சம்மந்தியிடம் கலந்து பேசிவிட்டு வருகிறேன் என சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான், எனது சம்மந்தி ஜெயராமனிடம் நடந்த விவரத்தையும், VAO இளங்கோவன் ரூ.20,000/– லஞ்சப்பணம் கேட்டது பற்றியும் விவரமாக சொன்னேன். எனது சம்மந்தி ஜெயராமன் என்னிடம், தனக்கு லஞ்சப்பணம் கொடுத்து தனது பெயருக்கு பட்டா வாங்க விருப்பமில்லை எனவும், VAO இளங்கோவன் மீது லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் செய்ய வேண்டும் என்று சொன்னார்.

சி. [signature] 24/1/19

Scanned by CamScanner

மேலும், VAO இளங்கோவன் கேட்ட லஞ்சப்பணம் ரூ.20,000/–த்தை என்னிடம் கொடுத்து கடலூர் லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுக்க சொன்னார். எனக்கும் VAO விடம் லஞ்சம் கொடுத்து பட்டா வாங்க விருப்பமில்லை. ஆகவே, நான் இன்று தங்களிடம் வந்து இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். மேலும், VAO இளங்கோவன் கேட்ட லஞ்சப்பணம் ரூ.20,000/–த்தை நான் எடுத்து வந்துள்ளேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட பரங்கிப்பேட்டை VAO இளங்கோவன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd- T.Ganesan, 24.01.2019. வாதி கொடுத்த புகார் மனுவின் உண்மை தன்மை பற்றி இரகசிய விசாரணை செய்ததில் புகாரில் கூறப்பட்ட குற்றச்சாட்டில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருந்ததால், இன்று 24.01.2019ம் தேதி காலை 09.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 1/2019, U/s 7 Prevention of Corruption Act 1988, as Amended by The Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர், இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

அ. [signature]
24/1/19

Inspector of Police,
V&AC - Cuddalore.

Scanned by CamScanner